Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.23/2021

Deposition of PW8 — Witness for Defence

Defence Court

| | | | |
|---|---|---|---|
| Name | :R.Geetha Lakshmi | Caste: | |
| Husband's Name | :Periyanayagi | Calling : | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on 25th April 2023.

**( A1 Produced on PT Warrant. A3 to A5 are present. A2 absent and Petition filed U/s.317 Cr.P.C is allowed )**

**முதல் விசாரணை-**

நான் தற்போது திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், கண்ணப்பாளையம் கிராமதத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் நான் கோலடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வந்தேன். 12/09/2020 அன்று காலை 10.30 மணிக்கு மேல் திருவேற்காடு காவல் நிலையத்திலிருந்து போலீசார் ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பு செய்து அன்றைய தினம் காலை 08.30 மணியளவில் கோலடி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒரு நகரில் முட்புதரில் ஒருவர் வெட்டுப்பட்டு கிடக்கிறார் என்று எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நானும் கிராம உதவியாளர் மதன்குமாரும் அந்த இடத்திற்கு சென்றோம். அங்கு போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் அப்போது அந்த இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த மண்ணும், மாதிரி மண்ணும், இரத்தம் தோய்ந்த முடியும், மாதிரி முடியும் போலீசார் எடுத்தார்கள். அவற்றை கைப்பற்றிய மகசரில் நான் முதலாவதாக கையொப்பமிட்டுள்ளேன். ( அந்த மகசர் ஏற்கனவே அ.த.சா.3

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). அன்றைய தினம் போலீசார் என்னை விசாரித்தார்கள். 13/09/2020 அன்று காலை 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் போலீசார் எனக்கு தொலைபேசி அழைப்பு செய்து, அயனம்பாக்கத்திலுள்ள மூன்று சிலை அருகே இவ்வழக்கு சம்பந்தப்பட்ட எதிரிகள் உள்ளார்கள் என்றும் அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லி என்னை அழைத்தார்கள். நான் உடனே எனது உதவியாளர் மதன்குமார் உடன் அவ்விடத்திற்கு சென்றேன். அந்த இடத்தில் வண்டியில் 5 எதிரிகளும் இருந்தார்கள். அவர்கள் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அவற்றில் முதல் சாட்சியாக நானும் இரண்டாவது சாட்சியாக மதன்குமாரும் கையொப்பமிட்டோம். எதிரி லால்பிரகாஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தொடர்ந்து அவர் போலீசாரையும் என்னையும் மதன்குமாரையும் அழைத்துக் கொண்டு சம்பவம் நடைபெற்ற கோலடி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட நகரில் உள்ள முட்புதருக்கு அழைத்து சென்று, அங்கிருந்து ஒரு இரத்தம் தோய்ந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பொருள் கைப்பற்றப்பட்ட மகசரில் நான் முதலாவதாகவும் மதன்குமார் இரண்டாவதாகவும் கையொப்பமிட்டுள்ளோம். (அந்த கத்தி சா.பொ.1 ஆகவும் அந்த மகசர் அ.த.சா.9 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது). மேலும் எதிரி லால் பிரகாஷ் ஆவடியிலிருந்து திருவேற்காடு செல்லும் சாலையில் உள்ள தரைபாலத்தை ஒட்டியுள்ள காம்பௌன்ட் சுவர் அருகே இருந்து இரத்தம் தோய்ந்த புளூ கலரில் கட்டம் போட்ட சட்டையை எடுத்து ஆஜர் ெ சய்தார். அதை கைப்பற்றப்பட்ட மகசரில் நான் முதலாவதாகவும் மதன்குமார் இரண்டாவதாகவும் கையொப்பமிட்டுள்ளோம். (அந்த சட்டை சா.பொ.2 ஆகவும் அந்த மகசர் அ.த.சா.10 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது). எதிரிகள் 1 முதல் 5 வரையிலானோர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் முதலாவதாக இருப்பது எனது கையொப்பம். (அவை முறையே அ.த.சா.11 முதல் அ.த.சா.15ஆக குறியீடு செய்யப்படுகிறது). அன்றைய தினமும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

12/09/2020 மற்றும் 13/09/2020 அன்று போலீசார் எனக்கு எழுத்துபூர்வமாக அழைப்பு ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. அலுவலக

பணி தவிர்த்து இவ்வழக்கிற்கு நான் சென்றது போன்று வேறு பணிகளுக்கு செல்லும் பொழுது அலுவலகத்திலுள்ள பதிவேட்டில் குறிப்பிடுவோமா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் வழக்கு பற்றி விவரத்தை சுருக்கமாக என்னிடம் போனில் அழைக்கும் போது கூறினாரா என்றால் இல்லை. போலீசார் விசாரிக்கும் போது நான் எவ்வாறு சம்பவ இடத்திற்கும் அடுத்த நாள் அயனம்பாக்கம் மூன்று சிலை அருகேயும் சென்றேன் என்பதை சொன்னேனா என்றால் இல்லை. நான் மதன்குமாருடன் அவரது இருசக்கர வாகனத்தில் சென்றேன். சா.பொ.1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு யார் உரிமையாளர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 13/09/2020 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் அயனம்பாக்கம் மூன்று சிலை அருகே சென்றோம். 13/09/2020 அன்று நாங்கள் சாயங்காலம் 04.30 முதல் 05.00 மணிவரை இருந்தோம். மதியம் சாப்பிடுவதற்காக சென்று வந்தோம். போலீசார் தவிர்த்து அந்த இடங்களில் பொது மக்களும் இருந்தார்கள் என்றால் சிலர் இருந்தார்கள். பொது மக்களின் பார்வைக்கு எதிரிகள் தெரியக்கூடாது என்பதாகையால் போலீசார் எதிரிகளை வண்டியில் இருக்க வைத்தார்களா என்றால் ஆம். அப்போது எதிரிகளின் மீது முகத்துணி போடப்பட்டிருந்ததா என்றால் ஆம். ஆதலால் எதிரிகளை பார்க்க முடியாது என்றால் சரிதான். போலீசார் அயனம்பாக்கம் மூன்று சிலை அருகே வைத்து நான் கையொப்பமிட்டேன். அந்த ஆவணங்களை போலீசார் எங்கே வைத்து தட்டச்சு செய்தார்கள் என்பது எனக்கு  தெரியாது. ஒவ்வொரு எதிரியையும் நேரம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சுமார் அரை மணி நேரம் இருக்கும். அந்த சமயத்தில் நான் வண்டிக்கு வெளியே இருந்தேன். நான் கத்தியின் வடிவத்தையும் சட்டையின் தன்மையையும் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கத்தியை எடுத்த இடம் எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் சரியல்ல. அந்த இடத்தின்  பெயர் கோலடியிலுள்ள அபிராமி நகர். எதிரிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பது எனக்கு தெரியாது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் கோலடியை சேர்ந்தவர்கள். எதிரிகளின் சொந்த ஊர் என்ன என்பதை என் முன்னிலையில் கூறினார்களா என்றால் இல்லை. நான் சொல்லியிருப்பது முழுக்க முழுக்க பொய்யான சங்கதிகள் என்றும், எதிரிகள் எந்த இடத்திலிருந்தும் எந்த பொருளையும் ஆஜர் படுத்தவில்லை என்றும், அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும்

தரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அன்று கைது செய்யப்பட்டது நான்கு எதிரிகள் தான் என்றும் ஆதலால் நான் சொல்லியிருப்பது பொய்யான சங்கதிகள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் நான் குறிப்பிட்ட நாட்களில் அந்த இடங்களில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.